# தட்சணகைலாச புராணம், திருக்கரைசைப் புராணம் ஆகியவற்றில் சைவசித்தாந்த கருத்துக்கள்

சுபராஜ் ந.[136] & கலைச்செல்வி அ.[137]

**ஆய்வுச் சுருக்கம்**

“சிவபூமி என்று திருமூலரால் அழைக்கப்பட்ட இலங்கையின் சிவாலயங்களின் மீதெழுந்த சைவத்தமிழ் இலக்கியங்களில் தலபுராணங்கள் முக்கிய இடம் பெறுகின்றன .இத்தல புராணங்கள் மூர்த்தித்தல தீர்த்தம் பற்றிய கோயிற் பண்பாட்டை சிறப்பாக புலப்படுத்துகின்றன. சைவ பண்பாட்டில் பல்வேறு பரிணாமங்களையும் விரித்துரைக்கும் நூல்களாகவும் விளங்குகின்றன. சைவத் தமிழரின் பண்பாட்டுத்துவம் சைவசித்தாந்தமாகும்.சைவ சித்தாந்த மரபு மிகவும் தொன்மையானது. இந்திய தத்துவ சிந்தனை மரபில் இன்றும் நிலைத்து வாழும் நெறியொன்றாகச் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. சிவனை முழுமுதல் இறைவனாக கொண்டமைந்த சைவசித்தாந்தமானது தத்துவ ரீதியிலும் சமய நிலையிலும் செழுமைக்குரிய வகையில் அமைந்துள்ளது. பதி,பசு,பாசம் எனும் முப்பொருட்களும் உண்மை என்பதே சைவ சித்தாந்த கொள்கையாகும். இச்சைவ சித்தாந்தமானது இந்திய தத்துவ மரபில் மட்டுமன்றி ஈழத்திலும் சிறப்பான நிலையில் வளர்ச்சிபெற்று உள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இவ்வகையில் கி.பி. 1240- கி.பி 1620 வரையான ஆரிய சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய தலை சிறந்த புராணங்களுள் தட்சண கைலாச புராணம், திருக்கரைசைப் புராணம் என்பன விளங்குகின்றன. இவ்விரு புராணங்களிலும் சைவ சித்தாந்த கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றமை ஈழத்து சைவசித்தாந்த வளர்ச்சியை எடுத்தக் காட்டுவனாய் உள்ளன. தலபுராண ஆசிரியர்களின் சைவசித்தாந்த புலமை இலங்கையின் சிவாலயங்கள் மீதெழுந்த தலபுராணங்களில் சைவசித்தாந்த கருத்துக்கள் விரவியிருக்க காரணமாயிற்று. அந்தவகையில், இவ்விரு புராணங்களும் தலபுராணங்களாக காணப்படினும் அவற்றுள் சைவசித்தாந்த கருத்துக்கள் காணப்படுகின்றன என்பதே ஆய்வுப் பிரச்சினையாக அமைந்தது. இலங்கையில் தோன்றிய இவ்விரு புராணங்களிலும் காணப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வின் முதல் நிலைத்தரவுகளாக தட்சணகைலாச புராணம், திருக்கரைசைப்புராணம் ஆகிய மூல நூல்களும், இரண்டாம் நிலைத்தரவுகளாக சைவசித்தாந்தம் தொடர்பாக வெளிவந்த நூல்களும் கட்டுரைகளும் பிற ஆக்கங்களும் அமைகின்றன. இவ்வாய்வு நோக்கத்தினை அடைந்துக்கொள்ளும் பொருட்டு விவரண ஆய்வு முறையாக அமைவதோடு சைவசித்தாந்த சாஸ்த்திரங்களில் இடம்பெறுகின்ற கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதினால் ஒப்பீட்டாய்வு மூலமும் மேற்கொள்ளப்படவுள்ளது. இறுதியாக இவ்வாய்வானது, திருக்கரைசைப் புராணம் தட்சணகைலாச புராணம் என்பன ஈழத்து தமிழகத் தொடர்பை பொருள் மரபாகக் கொண்டு இறைவனதும் அவனுரையும் தல சிறப்பு மகிமையினையும் கூறுவதோடு, சைவ சித்தாந்தக் கருத்துகள் மூலம் தத்துவக் கோட்பாட்டையும் விளக்கி நிற்பதைக் முடிவாக உரைக்கும்.

**பிரதான சொற்கள்:** சைவசித்தாந்தம், இறைவன், ஆன்மா, வீடுபேறு, தட்சிணகைலாச புராணம், திருகரைசைப் புராணம்

## 1.0 அறிமுகம்

சைவ பண்பாட்டை வளப்படுத்தியுள்ள பண்பாட்டு மூலங்களுள் தலபுராணம் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன.சைவப்பண்பாட்டின் கருவூலங்களாக விளங்கும் மகாபுராணங்களின் வழித்தடத்திலேயே தமிழிலும் தல புராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. தல புராணங்களுகளுக்கு மூலமானவை தேவாரப்பதிகங்கள். அவையாவும் திருத்தலங்களைப் பற்றியவை. அருவமான பரம்பொருளை உருவமாகிய கோலத்தில் போற்றி வழிபடுவதற்கென்று அமைந்தவை மூர்த்தி, தலம் ,தீர்த்தம் பற்றிய கோயிற் பண்பாட்டைத் கூறுவதுடன் சைவ பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும் சிறப்பாக சித்தரிக்கின்றது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் காலத்திற்கு காலம் தமிழில் பல தலபுராணங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். அந்த வகையில் ஆரியசக்கரவர்த்திக்காலத்திலே இலங்கையில் தோன்றிய தல புராணங்களுள் திருக்கரைசை புராணமும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய சிறப்பினை பெற்றுள்ளது. நூலாசிரியர் யாரென தெரியாவிடினும் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் இந்நூலாசிரியர் திருக்ரைசைப்புலவர் எனக் கூறியுள்ளார். இருப்பினும்.

**‘’எண்டகு சீரசானச் சிவன் மலர்த்தான்**
**மறவரி தன்னி தயந்தானே.........’’**

எனும் பாடலடிகள் ஈசானச்சிவன் என்பது உமாபதிசிவாசாரியாரையே குறித்து நிற்கிறது எனவும், இந்நூலாசிரியர் உமாபதிசிவாச்சாரியாரின் சீடன் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.குருவணக்கம், புராணவரலாறு ,

To whom correspondence should be addressed: Subaraj84@yahoo.com
[136] Lecturer (Prob.), Department of Languages, South Eastern University of Sri Lanka.
[137] Undergraduate, Department of Languages, South Eastern University of Sri Lanka.

அவையடக்கம் 15 செய்யுட்களிலும் தாபனச்சருக்கம் 17 பாடல்கள், பூசைச்சருக்கம் 46 பாடல்கள் கொண்டு காணப்படுகிறது. இறுதிச் செய்யுள் நூற்பயனை குறிப்பிடுகிறது.

அவ்வாறே ஆரியச்சக்கரவர்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற சிவதலங்களுள் ஒன்றான தட்சணகைலாசமான திருக்கோணஸ்வரம் பற்றிய தலபுராணமாகவும் சிங்கை செகராச சேகரனால்சைவராச பண்டிதன் எனும் குருவின் ஆக்ஞைப்படி வடமொழியிலுள்ள மச்சேந்திய புராணத்தினின்று மொழிபெயர்ந்து தட்சணகைலாச புராணம். ஏழு சருக்கங்களையுடைய செய்யுள் நடையாய் இயற்றப்பட்டது. இந்நூலில் பாயிரம் 15 செய்யுள், இலங்கை மண்டலச்சருக்கம் (39செ) திருமலைசருக்கம் (94 செ) புவேனோற்பத்திச் சருக்கம் (39) அர்ச்சனாவிதிச்சருக்கம்(86) மச்சாவதார சருக்கம்(48) தருசனாமுத்திச் சருக்கம் (195) திருநகர் சருக்கம் (116) செய்யுள்களையும் கொண்டு அமைந்துள்ளது.

.தலபுராணங்கள் தலங்கள் பற்றிய புராணக்களையும்,இயற்கை சூழலையும் மூர்த்தித்,தல,தீர்த்த சிறப்புகளையும் எடுத்துறைக்கின்றமையோடு அவற்றினூடக சைவசித்தாந்தக் கருத்துக்களையும் உள்வாங்கியதாய் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**2.0 இலக்கிய மீளாய்வு**

''சைவ சித்தாந்தத்தில் ஆன்மக்கொள்கை''(2005)எனும் நூல் இரத்தின சபாபதி,வை.,அவர்களால் எழுதப்பட்டுள்ளது.இந்நூலில் சைவகித்தாந்தக் கொள்கையை எவ்வாறு அனுக வேண்டும் என்பது பற்றியும்,சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்துக்களும் குறிப்பிட்டுள்ளார். ''சைவ வசித்தாந்த தெளிவு''(2012)எனும் நூல் ஞானகுமாரன்,நா.,அவர்களால் எழுதப்பட்டது.இந்நூலானது சைவசித்தாந்த உண்மைகளை அறியக்கூடிய வகையில் முப்பொருள்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ''சைவமும் நாமும்''(1991) எனும் நூல் தில்லைநாதன்,எஸ்., என்பவரால் எழுதப்பட்டது..இந்நூலில் சைவசித்தாந்த முப்பொருள் உண்மைகளும்,இவை குறிப்பிடும் முக்திக்குரிய மார்க்கங்களும்,சைவத்திற்கு சித்தாந்தத்தின் பங்களிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''அனைத்துலக சைவ மாநாடு,சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும்''(2017) எனும் நூல் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரிகத்துரையால் வெளியிடப்பட்டது.இந்நூலிலே சைவ சித்தாந்தம் சார்ந்த பல ஆய்வு கட்டுரைகளும்,இலங்கையர் சைவசித்தாந்தத்திற்கு வழங்கிய பங்களிப்பு சார்ந்த ஆய்வு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளது. உலகலாவிய ரீதியிலும் இலங்கையிலும் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆரியச்சக்கரவர்த்திக்கால தலபுராணங்கள் பற்றிய ஆய்வுகள் எழவில்லை.ஆகவே இந்த ஆய்வு இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

**3.0 ஆய்வு நோக்கம்**

ஈழத்தில் தோற்றம் பெற்ற இவ்விரு புராணங்களிலும் காணப்படும் சைசித்தாந்த கருத்துக்களை எடுத்துக்கூறுவதே ஆய்வின் நோக்கமாகும்.

**4.0 ஆய்வு முறையியல்**

இவ்வாய்வின் முதல் நிலைத்தரவுகளாக தட்சணகைலாச புராணம், திருக்கரைசைப்புராணம் ஆகிய மூல நூல்களும், இரண்டாம் நிலைத்தரவுகளாக சைவசித்தாந்தம் தொடர்பாக வெளிவந்த நூல்களும் கட்டுரைகளும் பிற ஆக்கங்களும் அமைகின்றன. இவ்வாய்வானது விவரண ஆய்வாக அமைவதோடு சைவசித்தாந்த சாஸ்த்திரங்களில் இடம்பெறுகின்ற கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதினால் ஒப்பீட்டாய்வு மூலமும் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5.0 பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

**5.1.இறைவன் பற்றிய சிந்தனைகள்**

இந்திய தத்துவ வரலாற்றில் தெளிவானதும் முடிந்த முடிவானதுமான தத்தவமாக சைவசித்தாந்தம் காணப்படுகின்றது. ஆழமானதும் புலமைத்துவம் வாய்த்ததுமான அத்திவாரத்தால் கட்டியெழுப்பப்பட்டது .இங்கு

இறைவன் ஆன்மா, உலகு போன்ற முப்பொருள் உண்மை விளக்கங்கள் சமய ஆச்சாரங்கள் அனுட்டானங்கள்,மனித வாழ்க்கை முறை போன்றன எடுத்துறைத்துள்ளது.

புராணங்கள் கதைகளின் மூலம் தத்துவங்களை எடுத்துக்கூறுகின்ற வகையில் சைவசித்தாந்தக் கருத்துக்களை தன்னகத்தே அமைத்துக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.திருத்தலங்களின் சிறப்பினை கூறமுனைந்த தலபுராண ஆசிரியர்கள் அப்பதியில் உறையும் சிவன் பற்றியும் அச்சிவபரம்பொருளின் பெருமை பேசும் சைவசித்தாந்தம் பற்றியும் தெளிவாகவே கூறியுள்ளனர்.

சைவசித்தாந்தமானது பதியினை முழு நிறைப் பொருளாகக் குறிப்பிடுகிறது. இறைவன் ஆனந்த சொரூபியான நின்மலயாய் நிற்கும் நிலையே அவனின் **மெய்நிலை** முதல் , நடு, இறுதி, இல்லாததாய், தூல சூக்கும சூனிய ரூபம் இல்லாததாய் , குணம் குறி இல்லாததாய் , ஒன்றாய்,அசலமாய், அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சோதியாய் , பஞ்சகிருத்தியத்திற்கு அதீதப்பட்டு நின்மல வடிவாய் விளங்கும் **சொரூப லக்கணம்** பற்றி திருவருட்பயன்

**‘‘தங்கும் அவன் தானே தனி’’(பா.9)**

**‘‘சலமிலன் பேர் சங்கரன்’’ (பா.1048)** என்றும்

**‘‘அகரவுயிர் போலறிவாகி யெங்கும்**

**நிகலிறை நிற்கும் நிறைந்து’’ (பா.1045)** என்றும்

**‘‘பல் கலையா கமவேதம் யாவையினும் கருத்துப்**

**பதி,பசு, பாச ந்தெரிதல் பதிபரமே யதுதான்’’ (பா.176)**

எனவும் மெய்கண்டசாஸ்திரம் குறிப்பிடுகின்றது.

ஆவன் ஆறு அத்துவாக்களை கடந்தவனாக இருப்பதனால் அவனுருவை சடப்பொருள் போல பேசுவது அறிவுடமை ஆகாது என்கிறது சிவஞான சித்தியார்.

**“நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே என்னில்**

**அத்துவா மார்க்கத்து உள்ளான் அவன் இவன்”**

என விதந்துரைக்கிறார்.சொருப நிலையில் இறைவன் தத்துவ உண்மைப்பொருளாகவும் நிறைவான பூரணனாகவும் எடுத்தாளப்படுகின்றார்.

இக்கருத்தினை திருக்கரைசை புராணமும்

**‘’துளக்குறுஞ் கோவி வால சூரிய ருதய மொப்ப**

**விளர்பரும் பஞ்ச பூத மெய்யொகும் விளங்கா நிற்கும்**

**அளப்பருங் கைலை மீது ......’’(பா.5)**

**‘‘ஆரண முதலே யந்தமே நடுவே.....’’ (பா.6)**

எனும் பாடலில் குறிப்பிடுகிறது . அவ்வாறே தட்சணகைலாச புராணத்திலும்

**‘‘ ஆன அப்ப கிரண்டம் அடங்கலும்**

**ஞானமாய் அற்றது தன்னுடல் அற்றது**

**பானம் அற்றது பாவனை அற்றது’’(பா.48)** எனும் பாடலில் குறிப்பிடுகிறது.

இறைவன் அருளானாக மாறுகின்ற நிலையே சைவசித்தாந்தம் உருவ நிலையில் வைத்து **தடத்த நிலை** என நோக்குகிறது.

**‘‘அருவமோ உருவ அரூபம்**

**ஆனதோ அன்றி நின்ற...........’’ (சிவஞான.சி.58)**

இதனை திருக்கரைசை புராணம்

**‘‘மத்தமும் மெருக்கு மிதழியு மறுகும்**

**வன்னியுஞ் செக்கர்...........’’ (கங்கை சருக்கம் பா.58)**எனும் பாடலிலும்

தட்சணகைலாச புராணமானது

**''மத்தமும மெருக்கு மிதழியு மறுகும்**

**வன்னியுஞ் செக்கர்....'' (திருமலைசருக்கம் பா.9)** எனும் பாடலிலும்.

**''தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சக்தியாய்**

**ஆர்வத்து நாதம் அனைத்தொரு வித்துவாம்.....''(பா.37)**

எனும் பாடலிலும் கற்பனை கடந்த சோதி, ஐந்தொழிலை ஏற்று நடத்தும் சதாசிவமூர்த்தியாய் தோன்றி, சதாசிவன் சிவசக்தி விளங்க ஏதுவாக இருப்பதாக **தடத்த சிவன்** எனவும் பெயர் பெறுவர் எனவும் குறிப்பிடுகிறது.

தடத்த நிலையில் இறைவன் தன்னுடைய சிற்சக்தியைக்கொண்டு நிஷ்களம் சகளயநிஷ்களம், சகளம் ஆகிய 3 விதமான திருமேனிகளை விளங்குவதை குறிப்பிட்டு இவ்வுருவம் திருமேனிக்கொண்டு இறைவழிபாடு ஆற்றும் அறிவுடையோர் அன்பு முதிர்ச்சி அடைந்து இறைவனோடு ஊன்றி கலக்கும் அத்துவித முக்தி கிடைக்கும் என்கிறது. சைவசித்தாந்தம்.

**''அருவமோ வுருவா ரூபமான தோவன்றி நின்ற**

**உருவமோ.....''**

இந் நிலையை தட்சணகைலாச புராணமானது தருசனாமூர்த்தி சருக்கம்

**'' நின்று உருவாய் அருவாகி அகம் புறம் நீங்காதாய்.............(பா.140)**

உருவுடையவனாகியும், அருவுருக்கொண்டவனாகியும், அருவேயாகியும், உயிர்கள் அனைத்திற்கும் உயிர்க்குயிராகித் தோன்றினன் என்பதில் காணலாம்.

இத்தகைய தடத்த நிலையில் இறைவன் உயிர்களுக்காக **ஐந்தொழில்** புரிகின்றான்.

**'' அவன் அவள் அது எனும்**

**அவை மூவினைமையின்**

**தோன்றிய திதியே ஒடுக்கி மலத்துலதாம்''**

உலகின் தோற்றம் ஒடுக்கத்திற்குரிய நிலைக்களனாக எடுத்தாளப்பட்டுள்ளது. மாயையின் ஒடுங்கித் தோன்றிய உலகும் மாயை காரணமாக விளங்கும் முதல்வன் சக்தியில் ஒடுக்கித் தோன்றும். இதனை திருக்கரைசை புராணமானது இறைவன் சகல வடிவமாகி சிருஷ்டி முதலிய ஐந்தொழிலாற்றுகிறான் என்கிறது

**'' ஐந்தொழில் வகை நடாத்தி**

**வலப்பருஞ் சகளமாகி''**

இதனை தக்ஷ்ணகைலாச புராணமானது திருமலை சருக்கம்

**'' அனைத்தோடு வித்துவாம்**

**பராச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்**

**சார்வத்து சக்தி''(பா.35)**

ஐந்தொழிலை ஏற்றுநடத்தும் சதாசிவ மூர்த்தியாய் குறிப்படப்பட்டுள்ளது. மூலம் இறைவன் ஐந்தொழில் புரிவதை காணலாம்.

அவ்வாறே இறைவன் **எண்குணங்களை** பெற்ற நிலையையும் குறிப்பிடுகின்றது.

**'' கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**

**தாளை வணங்காத்தளை''(குறள் 9)**

இதனை தட்சணகைலாச புராணமானது அர்ச்சனாவிதி சருக்கம்)

**'' வணங்கு நாயகி மத்திமை........**

**குணங்கொள் மேனிக் கொழுந்தினை நோக்கினான்''(பா.43)**

பேராற்றில் வடிவினனும், அனைத்துமாயிருப்பவன் , பிரபஞ்சத்தில் கட்டுப்படாதவன் தனக்கு தானே ஒப்பானவன், முற்றும் உணர்ந்தவன் , தொடக்கமும் முடிவும் அற்றவன் , பேரன்பு வடிவானவனும் ஆய எண்குணங்களை கொண்ட வடிவினன் என குறிப்பிடுகிறது.

**5.2.ஆன்மா பற்றிய சிந்தனை**

ஆன்மா பற்றிய எடுத்துரைப்பில் உயிருக்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தம் சைவ சித்தாந்தத்தில் முக்கியமானது உடல் இன்றேல் வினைகள் ஒழியாது , வினைகள் ஒழியாமல் முக்தி கிடைக்காது ஆகவே உயிருக்கு உடலின் ஒப்பந்தம்மென்பது ஒரு மேல் நிலைத்தத்துவம் இதனால்தான் நாவலர் ''**பெறுதற்கரிய இச்சரீரம் நமக்கும் கிடைத்தது முக்தி இன்பம் பெறும் பொருட்டே ஆகும்.**'' எனகுறிப்பிடுகிறார். சைவசித்தாந்தமானது.சிவஞான சித்தியார் பா.37)

**'' அழிப்பு இளைப்பு ஆற்றல்**
**ஆக்கல்அவ்வவர் கன்மமெல்லாம்**
**கழந்திட நுகரச் செய்தல்**
**காப்பது கன்ம வொப்பில் ....''**

திருக்கரைசை புராணமானது இலஙடகை சருக்கம் பா.01)

**'' உரை செய் நல்வினை தீவினையிரண்டிற்கும் முடலாய்''**

எனக்குறிப்பிடுகின்றது.

சகலர் , பிரளயாகலர் , விஞ்ஞானகலர் எனும் மூவகை ஆன்மாக்கள் பற்றி சைவசித்தாந்தமானது

**'' உரைதரும் இப்பசுவர்க்கம் உணவின் மூன்றாம்**
**உயிரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்**
**நிறையின் பல மலர் கன்மலம் கன்மமாயை''**

என பாசபந்த இணைப்பின் அடிப்படையில் இந்நிலை பெறுவதாக சிவஞான சித்தியார் குறிப்பிடுகின்றது. இதனை திருக்கரைசை புராணமானது.

**''சமைப்புறு சகலார்குள்ள தனு முதனான்குந்தோன்றி''** என தனு,கரண, புவன போகங்கள் அனைத்தையும் கொண்டிருக்கும் சகலர் பற்றி குறிப்பிடுகின்றது.

**5.3.உலக படைப்பு**

ஐந்தொழிலாற்றும் இறைவன் சக்தியை தன் பாகமாக துணைகாரணமாகக் கொள்கிறான் என சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.

**''சக்தியும் சிவமுமாய**
**தன்மை இவ்வுலகமெல்லாம்**
**ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்**
**உணர் குண குணியுமாகி**
**வைத்தனன் அவளால் வந்த**
**ஆக்கம் இவ் வாழ்க்கையெல்லாம்''**

என சுட்டி நிற்கின்றது ஆன்மா மீது இரக்கம் கொண்டு சக்தியோடு இணைந்து உலகைப்படைத்தான் என திருக்கரைசை புராணம் இ.ச.பா.4)

**''உமைக்கிறை யாகித் தானு முறைந்திடு**
**நேய முற்றே..............''** எனும் பாடலிலும்

தட்சணகைலாச புராணமானது பாயிரம் காப்பு 2

**''.............ஒரு பாக மாதும்**
**ஏந்தி ஒரு கயிலை நிற்கும் இறைவன் தன்னை''**

இறைவன் குஞ்சிதபாத நடனத்தினை அதன் மூலமாக ஆன்மாக்களுக்கு அருளையும் விளக்கி இப்பிரபஞ்சம் அனைத்தும் ஆண்மையும் பெண்மையும் ஒன்றியே இயல்வதே முறைமை என்பதால் சிவன் தன் பாகத்தால் உமையை கொண்டிருப்பது கூறப்பட்டுள்ளது.

மேலும் உலகப்படைப்புக்கு மாயையே முதற் காரணம் என்கிறது சைவசித்தாந்த், சுத்த மாயையில் இருந்து சிவதத்துவம் தோன்றுவதாக சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.

**‘‘விந்தையோடு ஈசார் சாதாக்**
**கியம் சக்தி சிவங்கன் ஐந்தும்**
**சுத்த தத்துவம் சிவன் தன்**
**சதந்திர வடிவமாகும்’’**

இதனை திருக்கரைசை புராணமும் இறைவன் சிற்சக்தியை சிருஷ்டித்து அந்த சிற்சக்தியிலிருந்து பராசக்தியை தோற்றுவித்து அதன் அருளினால் தவறில்லா சுத்த மாயையிலிருந்து நாதம் முதலிய ஐந்தையும் தோற்றுவித்தான்.

**‘‘செப்பருந் தனிச்சு பாவ சிற்சித்தியதனை நல்கி**
**அப்பெருஞ் சக்தி தன்னி லாயிரத் தொரு .......’’ (இ.ச.62)**

எனும் பாடல் பிரபஞ்ச உற்பத்திக்கு பராசக்தியை முன்னிலைப்படுத்தி குறிப்பிட்டுள்ளது.
அசுத்த மாயையிலிருந்து 7 தத்துவங்களும் பிரகிருதி மாயையிலிருந்து 24 தத்துவங்களும் தோன்றின என்பதை சிவஞான சித்தியார்

**‘‘சுத்த தத்துவங்கள் என்று**
**முன்னமே சொன்ன ஐந்தும்**
**இத்தகைமையின் இயல்பும்**
**இவை முப்பத்தொன்றுமாகத்**
**தத்துவம் முப்பத்தாறாம்’’** எனும் பாடலில் குறிப்பது.

இதனை திருக்கரைசை புராணத்திலும் இ.ச.4

**‘‘அமைப்புறும் அநந்த தேவர் அருளினால் அதோமாயைக்கண்**
**இமைப்புறு தத்துவங்கள் இயல்பிய முப்பத்தொன்றுஞ்’’**

அநந்த தேவர் அருளால் அதோ மாயையிலிருந்து 36 தத்துவங்கள் தோன்றின என்கிறது.

**‘‘ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனக்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அரன் கழல் செல்லுமே....’’**

ஆறாம் அறிவினை பெற்ற மனிதராய் பிறந்தால் மட்டும் போதாது ஐம்புல வேடர் என உவமிக்கத்தக்கதாகும் ஐந்து பொறிவாயில்களையும் அறவழிப்படுத்தி மேன்மைபெற வேண்டும் என்கிறது சைவசித்தாந்தம்.

**இதனை தட்சணகைலாச புராணமானது திருமலை.ச. (பா.3)**

**‘‘எங்கணும் பரந்த நீத்தம் எறியலை”**

பேரருளில் அருள் அலையில் , உலகில் இயக்கம் அனைத்துங் கரைந்து நிற்க, பஞ்சபூதங்களும் இப்புலன்களின் அனுபவமான பஞ்ச இந்திரியங்களும் செயல் அற்று இன்றாகிவிடும் அந்நிலையில் உள்பொருள் தெளிவாகத் தோன்றும் என்கிறது.

**5.4.முக்தி பற்றி சிந்தனைகள்**

சிவத்தோடு திளைத்தளோ சித்தாந்த முத்தி ஆன்மாவானது பாசத்தில் அழுந்தி நிற்கும் நிலையினை பெத்த நிலை என்பர். அந்த ஆன்மாவானது ஆணவத்தில் அழுந்த நிற்பதை போன்றே முக்தி நிலையில் சிலனோடாய் அழுந்தி நிற்கும் இதனை தாடலை நிலை எனக் குறிப்பிடுகின்றது.

முக்திக்குரிய வழியாக பல வழிமுறைகளை சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. அவ் வழிகளுள் , **மலநீக்கத்திலிருந்து விடுதலை** பெரும் ஆன்மா இறைவனின் அருளை பெறலாம் என்பதை தட்சணகைலாச புராணமும்.(அ.வி.ச.பா.70,)

**''கண்ட நஞ்சுடை கோவை**
**....அந்தக் துண்டவான் மாயகைத் தர்ப்பை**
**சுட்டுவன் திலகம் இட்டான்''**

எனும் பாடலில் குறிப்பிடுகின்றது. இதனை திருக்கரைசை புராணமானது ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்காமல் இருக்க இறைபதம் நாடுதல் வேண்டும் என்பதை (திருமலை.ச. பா.22)

**''பிறந்திருந்து உழல்வது தீரக்கரசை நன்னகா**
**வாழ்பிரான் சுழவினை''** எனுமபாடலில் குறிப்பிடுகிறது.

மேலும் பிறப்பெனும் துன்பத்தை நீக்கி முக்தியெய்த **தீர்த்த வழிபாட்டை** ஒரு மார்க்கமாக திருக்கரைசைபுராணம் குறிப்பிடுகிறது.

**''பிறப்பறுக்கும் அங்கங்கை பிறக்கும் துறைப்**
**புலலாடிப்......''**

இதனை தட்சணகைலாச புராணமும் (தரு.ச.பா.175)

**''ஆயிரம் வரும் காசி**
**அரும் பெரும் கங்கை தோயும்.....''**

**பஞ்சாட்சர மந்திரத்தை** மனதில் கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆன்மா சிவபோகத்தில் மகிழ்ச்சியடையும் என்பதை திருக்ரைசை புராணம்

**''அஞ்செழுத்து நாக்குறைய வாழுவரின்னாக் குறைய**
**விஞ்சுலகத் தடையிடாக்கு வேண்டினர்''** எனும்
பாடலில் குறிப்பிடுகிறது. தட்சணகைலாச புராணமானது (அ.வி.ச. பா.21)

**''கரத்துடன் கரந்தைவரத் காட்சியால்**
**உரைத்த அங்குலி ஒன்றுடன் ஒன்றுறப்**
பரத்துள் **ஈசர் பதினொரு மந்திரம்**
**நிரைத்த பாணி** நியாயம் **முடித்தனன்''**

சிவாய நம என உன்றும் பொழுது மூலக்கனல் பிரம மந்திரம் எனப்பகரப்படும் துவாதசாந்தத்தினை அடைந்து தன்னை மறந்து தன் நாமம் கெட்ட துரியாதீத நிலை ஏற்படும் என்கிறது. மேலும் நால்வகை மார்க்கங்களை முக்திக்குரிய வழியாக சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக சரியை நெறி பற்றி குறிப்பிடுவதை நோக்கின்

**''தாத மார்க்கம் சாற்றில் சங்கரன் கோயில் தலம் அலகட்டிலகுதிரு மெழுஞ்சாத்திப்... ''**

**''உரை சிறந்த தென்கயிலைப் பெருமானை.....விரை சிறந்த மலர்தூவி அருசிந்துச்.....(த.பு.திருமலை ச.பா.28)**

**''ஏலம் மாவொடு நெல்லி இரசனி**

**ஆலம் உண்டவர்க்கு ஆமென வைத்தனன்...'' (அ.வி.ச.பா.38)**

எனும் பாடல்களில் இறைவனுக்கு புரியும் சரியை தொண்டு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
லிங்க வழிபாடு முக்திக்குரீய சாதனமாகும்.இந்த வகையில் சைவசமய வழிபாட்டு மரபுக்கு நிலைக்களாக விளங்குவது இறைவனது திருவுருவங்கள்.இறைவனது சாச்நித்தியத்தை ஏற்படுத்தவல்ல வழிபாடு திருவுருவில் நடைபெறுகின்றன.

**"கிரியை என மருவும் அவையாவும் ஞானம்**

**கிடைத்தற்கு நிமித்தம்"** (உமாபதிசிவாச்சாரியார்)

இராவணனுக்கு அனைவராலும் போற்றப்படும் சிவனால் பொன்னொளி வீசும் லிங்கமும்,பிரம்மனால் பிருதுவி லிங்கமும்,திருமால் உருத்திரலிங்கமும் கொடுத்துதிருமலையில் அதன் அந்தமாக விளங்கும் முடியிடத்தில் அமைவுறச் செய்து வழிபாட்டினை செய்வாயாயின் உன் அன்னையின் முக்தியை பெறத்தரும் பேற்றினைப் பெறுவாள் எனக்கூறி மறைந்து போயினர் என்பதன் முலம் முக்திக்குரிய வழியாக லிங்க வழிபாடு பெறும் முக்கியத்துவத்தினை அறியலாம்.

**5.5.தளை**

கன்மச் செயற்பாடானது இறைவனது ஆனைக்கும்,ஒழுங்குக்கும் அமைவாகவே திகழ்கின்றது என்கிறது சைவசித்தாந்தம்.

**" அவையே தானேயாயிரு வினையின்**

**போக்கு வரவு புரிய வாணையிற்**

**நீக்கமின்றி நிற்குமன்றே"**

ஆலயங்களை வணங்குவதால் உயிர்களை பீடித்துள்ள மலங்கள் நீங்குவதாக சிவஞானபோதம் குறிப்பிடுகிறது.

**"மாலற நேயமும் மலிந்தவர்வேடமும்**

**ஆலயந்தானும் அறனெனத்தொழுமே"**

தலபுராணங்கள் கிரியைகள் ஆற்றுவதால் ஏற்படக்கூடிய பலன்களை குறிப்பிடுவதோடு நலம் செய்யும் வினைகள் நீங்குவதற்குரிய வழிமுறைகளில் ஒன்றாக அதனைக்குறிப்பிடுகின்றது.தட்சணகைலாச புராணம்(112)

**" வரம் தரும் தென் கயிலை மன்னிய…….**

**போற்ற நீள்வினை துரந்து அரன் ஆவது சொல்லவும் வேண்டுமோ"**

**5.6. சைவவித்தாந்த அறவியல்**

மனம்,வாக்கு,காயம் ஆகியவற்றில் ஓருமித்த செயற்பாடே சைவ சித்தாந்த அறக்கோட்பாடாகும்.

**" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம்**

**வழுக்கிலாத்தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கள் வாய்மை**

**அழுக்கிலாத்துறவு அறிவொடு அர்ச்சித்தல் ஆதி**

**இழுக்கிலா அறங்களாளால் இரங்குவன் பணியறங்கள்"**

தானம்,தவம்,கல்வி,தொண்டு,பணி,புண்ணியம்,ஒழுக்கவியல் தண்டனை நீதி பற்றி சைவசித்தாந்தம் எடுத்துறைத்துள்ளது.இதனை தல புராணஙடகளில் காணலாம்.

**"காவணம் பொய்கை பைம்பூ**

**காவனம் அரற்கு செய்வார்**

**கோயிலும் மதிலும் செம்பொன்**

**கோபுரம் முதல செய்வார்**

**மேவும் மெலடலாடை சந்தம்**

**வெண்மணிப் பூணும் ஈவார்" (த.பு.171)**

அடியவர்க்கு தங்குமிடம்,நீர்த்தடம்,பசிய மலர்சோலை,என்பவற்றை இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்களில் செய்வாரும்,கோயிலும் மதிலும் செம்மைமிக்க கோபுரங்கள் முதலியவற்றை செய்வாரும் இறைப்பணிக்குரிய

பொருட்களை கொடுப்பவரும் மூவுலகத்தினராலும் போற்றி வணங்கப்படுகின்ற தேவர்களிலும் மேலானவர்களாக இருப்பர்(அறத்தின் மேன்மை புலப்படுகின்றது.)

இராவணன் சீதையை கவர்ந்து வந்தமையால் ஏற்பட்ட விளைவில் பண்பு, ஒழுக்கம், தண்டனை பற்றிய அறம் உரைக்கப்படுகின்றது.

**“சீதைதனைக் கொணர்ந்து சிறை நண்ணிவைத்த**
**தாளாண்மைதனில் இழந்தான் இராகவன்**
**கையம்பு ஒன்றால் தலைகள் பத்தும்”** (த.பு.திருநகரசருக்கம்.பாட.5)

தனது மேதகு பண்பு,வீரம்,அன்பு இழந்து இராமனது கையம்பால் தன்தலை பத்தினை இழந்த புராணகதை மூலம் இவ்வறம் வழியுறுத்தப்படுகிறது.

குளக்கோட்ட மன்னன் வரலாற்றில் அவன் ஆகம முறைப்படி இறை பூசை வழிபாடு செய்து.மன ஒடுக்கம் பெற்ற அந்தணர்க்கு தானம் வழங்கி,ஆகமம் கூறும் நெறிகளை எங்கும் புரிந்து இறைவனை பூசித்து உய்மின்கள் என்றான் என்பதன் மூலம் தொண்டு,நீதி,பணி என்பன எடுத்துரைப்பதை காணலாம்.

**6.0 முடிவுரை**

தொகுத்து நோக்கும் போது திருக்கரைசை புராணம் தட்சணகைலாச புராணம் என்பன ஈழத்து தமிழகத் தொடர்பை பொருள் மரபாகக் கொண்டு இறைவனதும் அவனுரையும் தல சிறப்பு மகிமையினையும் கூறுவதோடு, சைவ சித்தாந்தக் கருத்துகள் மூலம் தத்தவக் கோட்பாட்டையும் விளக்கி நிற்பதைக் காணமுடிகின்றது. மேலும் இறைவன் ஆன்மா,வினைப்பயன், முக்திக்குரிய வழிகள் என சைவசித்தாந்த கருத்துக்களை வாழ்வின் மேன்மைத்தரும் வகையில் தல புராணங்களிளே வலியுறுத்தப்பட்டுள்ளமையும் சிறப்பாக குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்.

**உசாத்துணைகள்**

1. சுபராஜ்,ந.,(2012), அழிந்த திருத்தலமும் அழியாத அதன் தலபுராணமும்,சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்,திருகோணமலை.
2. பத்மநாதன்,சி.,(2005),இலங்கையில் இந்து சமயம்,குமரன் புத்தக இல்லம்,டாம் வீதி,கொழும்பு 12.
3. பத்மநாதன்,சி.,(1995),தட்சணகைலாச புராணம்,இந்து சமய அலுவல்கள் திணைக்களம்,98 வோட் பிரேஸ் கொழும்பு 7,இலங்கை.
4. ஞானகுமாரன்,நா.,(2012),சைவசித்தாந்த தெளிவு,தூண்டி கேணியடி திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
5. முத்துராமன்,எம்.,(2006),சைவசித்தாந்தம்,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு-சென்னை.